**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 17.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
•••••••••

**வழக்கு எண்.SA 7349/E/2017**
**(SA 7350/E/2018) & SA 7352/E/2018)**

Thiru T.M.Srinivasan ... மேல்முறையீட்டாளர்

Vs.

The Public Information Officer,
PA to Revenue Divisional Officer,
Revenue Divisional Office,
Tambaram, Chennai - 600 045.

The Public Information Officer,
PA to Collector (General)
Kancheepuram.

The Public Information Officer,
Taluk Office,
Pallavaram at Chromepet,
Chennai - 600 044. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 28.06.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 19.07.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 30.09.2018 |

******

## <u>ஆணை</u>

இன்று (17.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு G.தட்சிணாமூர்த்தி ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி அ.ஷோபா, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) (பொ), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம், மற்றும் திரு V.செந்தில், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தாம்பரம், சென்னை ஆகியோர் ஆஜரானார்கள். தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பல்லாவரம் , சென்னை ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 8-ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தான் ஆஜராகாதது குறித்து ஆணையத்திற்கு எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை. இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மேல்முறையீட்டாளர் 28.06.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கீழ்க்கண்டவாறு 11 இனங்களில் தகவல் கோரி பொதுத் தகவல் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தாம்பரம், சென்னை என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்:

1. **Please inform the action taken by District Collector / Revenue Divisional Officers / Thasildhar on Patta issued by producing Fake Legal Heir Certificate.**

2. **Patta was issued based on Fake Legal heir Certificate of Deceased person and it was comes to the knowledge in letter period, Please inform the action taken by District Collector / Revenue Divisional Officer / Thasildar on the issued patta.**

3. **Please inform whether Criminal / Civil action will be taken on the persons, who produces the fake legal heir certificate for getting patta.**

4. **Please give me the copy of documentary record / written file depicting the details of action taken on my wife Mrs.P.Bhuvaneswari's patta objection letter, dt.28.05.2018 by Revenue Divisional Office.**

5. **Please give me the copy of documentary record / written file depicting the details of criminal action / Civil Action taken on Mr.P.S.Deivanayagam's wife, Sons, surviving Daughters and Purchasers of land owned by Mr.P.S.Deivanayagam & sold by his sons for getting patta by producing fake legal hier certificate of Mr.P.S.Deivanayagam.**

3. தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 19.07.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், Revenue Divisional Office, Tambaram,

Chennai - 600 045 அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 30.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (17.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 04.07.2018, 01.08.2018 மற்றும் 30.08.2018 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்த ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் இனம்வாரியாக வழங்கப்பட வேண்டுமென்றும் ஆணையம் தீர்மானித்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, கிராம நிர்வாக அலுவலக அனைத்து கிராம கணக்குகளையும் பொதுத்தகவல் அலுவலரின் அலுவலகத்திலுள்ள ஆவணங்களையும், மேல்முறையீட்டாளர் முன்பு ஆஜர்படுத்தி, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2(j)-ன்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆய்வு செய்ய அனுமதியளித்து, தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோரும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி வழங்கி, அவரது ஒப்புகையைப் பெற்று, அது குறித்த அறிக்கையை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

2. **மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதா என்பதை கண்காணித்து அதுகுறித்த அறிக்கையை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல்**

அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**வழக்கு எண். SA 7349/E/2017**
**(SA 7350/E/2018) & SA 7352/E/2018)**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

The Public Information Officer,
PA to Revenue Divisional Officer,
Revenue Divisional Office,
Tambaram, Chennai - 600 045.

The Public Information Officer,
PA to Collector (General)
Kancheepuram.

The Public Information Officer,
Taluk Office,
Pallavaram at Chromepet,
Chennai - 600 044.

**மனுதாரர்**

Thiru T.M.Srinivasan,
New No.378, Old No.672,
Thiruvotriyur High Road,
Tondiarpet,
Chennai - 600 081.

Copy to: Judgement File.
*"VP / PA -24.09.19"*